பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி சென்னை – 4

04 08 2025 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு முடக்குவதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

- சீனா உடனான கல்வான் பள்ளத்தாக்கு மோதலின்போது இந்திய ராணுவம் குறித்து அவதூறான கருத்துக்களை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்திக்கு, உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

- கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் பதிவு செய்வதற்கான கால அவகாசம் வரும் 15-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பீகாரில் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

- *17* வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் ***Sitender*** தங்கப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>>

மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக அவை நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.

பீகாரில் மேற்கொள்ளப்பட்டுவரும் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் தொடர்பான பிரச்சினையை எழுப்பி எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் முதலில் பிற்பகல் *2* மணிவரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக, அவை நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு முடக்குவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா மீதான விவாதத்தை இன்று நடத்த விடாமல் எதிர்க்கட்சிகள் செயல்படுவது ஏற்புடையது அல்ல என்றார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவும் முக்கியமான இந்த மசோதா மீதான விவாதம் நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

*<<<<<<>>>>>>>*

கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த 2020-ஆம் ஆண்டு சீனா உடனான மோதலின்போது இந்திய ராணுவம் குறித்து அவதூறான

கருத்துக்களை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்திக்கு, உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தனக்கு எதிரான அவதூறு வழக்கை ரத்து செய்யக்கோரி, திரு ராகுல்காந்தி தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு Dipankar Datta, திரு A G Masih அமர்வு, அவருடைய கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்தது.

எதிர்க்கட்சித்தலைவராக உள்ள அவர், இதுபோன்ற கருத்துக்களை நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டும், பொதுவெளியில் ஊடகங்களில் தெரிவிக்கக் கூடாது என்று நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

இந்தியாவின் 2 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பை சீனா ஆக்கிரமித்ததாக திரு ராகுல்காந்தி எந்த அடிப்படையில் தெரிவித்தார் என நீதிபதி திரு Dipankar Datta கேள்வி எழுப்பினார்.

எனினும், அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் அவதூறு வழக்கு விசாரணைக்கு நீதிபதிகள் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

<<<<<<>>>>>>>

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து எதிர்க்கட்சிகள் தேவையற்ற பிர்ச்சினைகளை எழுப்புவதற்கு மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் என்பது நாட்டில் முதல் முறையாக நடைபெறும் நிகழ்வு அல்ல என்று கூறினார்.

தேர்தல் ஆணையம், உச்சநீதிமன்றம் மற்றும் மத்திய கணக்கு தணிக்கை அலுவலகம் ஆகியவற்றின் மீது எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நம்பிக்கை இல்லை என திரு பிரல்ஹாத் ஜோஷி குறை கூறினார்.

<<<<<<>>>>>>>

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித்தொகை வழங்கும் பிரதமரின்மாத்ரு வந்தனா திட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு வரும் 15-ஆம் தேதிவரை நீட்டித்துள்ளது.

அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்கள் வீடு வீடாக சென்று இந்த திட்டத்தின்கீழ், பெயர்களை பதிவு செய்து வருவதாகவும், தகுதியுடையவர்கள் உரிய நேரத்தில் இத்திட்டத்தில் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த, ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ள ஏதுவாக அவர்களின் வங்கிக்கணக்கில் நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் நான்கு கோடியே ஐந்து லட்சம் மகளிர் பயனடைந்திருப்பதாகவும், அவர்களுக்கு 19 ஆயிரத்து 28 கோடி ரூபாய் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பிலிப்பைன்ஸ் அதிபர் திரு Ferdinand Romualdez Marcos Junior –ன் இந்திய வருகை இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், ஐந்து நாள் அரசு முறைப்பயணமாக பிலிப்பைன்ஸ் அதிபர், இந்தியா வந்திருப்பதாக கூறியுள்ளார்.

புதுதில்லி விமான நிலையத்தில் பிலிப்பைன்ஸ் அதிபரை வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு Pabitra Margherita, வரவேற்றதாக தெரிவித்துள்ளார்.

இந்தியா- பிலிப்பைன்ஸ் இடையே ராஜ்ய ரீதியலான உறவுகள் ஏற்பட்டு, 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அந்நாட்டு அதிபரின் வருகை இந்த நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்திய அஞ்சல் துறை தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டின்கீழ், நாடு முழுவதும் புதிய மென்பொருளை இன்று முதல் அறிமுகம் செய்துள்ளது.

தமிழகத்தின் காஞ்சிபுரம் தலைமை அஞ்சல் அலுவலகத்தில், இந்த நவீன தொழில் நுட்பத்தை கோட்ட கண்காணிப்பாளர் திரு அருள்தாஸ் தொடங்கிவைத்தார்.

வாடிக்கையாளர்கள் ஆன்லைன் முறையில் கடிதங்களை பதிவு செய்தால், தபால் ஊழியர்கள் வீடுகளுக்கே வந்து அவற்றை பெற்றுச் செல்வார்கள் என்று அவர் தெரிவித்தார்.

*(Voice Byte - அருள்தாஸ் – 50 Sec)*

<<<<<<>>>>>>>

பீகாரில் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பாட்னா, பாஹல்பூர், புக்சார், பங்கா உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் பெய்துவரும் தொடர் மழை காரணமாக கங்கை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

பல்வேறு இடங்களில் கிராமங்களுக்குள் தண்ணீர் புகுந்ததால், பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணியில் மாநில பேரிடர் மீட்புக்குழுவினருடன் தேசிய பேரிடர் மீட்புப்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

டானாபூர் பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் கால்நடைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ந்து வெள்ள நிலைமையை கண்காணித்து வருவதாகவும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

விவசாய நிலங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதால், பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசம், ஹரியானா, தில்லி, கேரளா, தமிழகம் உள்ளிட்ட 14 மாநிலங்களில் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், லடாக், லட்சத்தீவு, நாகாலாந்து, மிசோரம் உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

கடலோர ஆந்திர மாநிலம், மேற்குவங்கத்தின் கங்கை கரையோரப் பகுதிகள், ஜம்மு காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, மேற்கு மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் இடி-மின்னலுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தைவானின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக, நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். 70-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் சராசரியாக 200 மில்லி மீட்டர் மழை பெய்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து சுமார் 6 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

140 இடங்களில் சாலைகள் மற்றும் சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளதாகவும், பல இடங்களில் சாலைகளின் குறுக்கே நிலச்சரிவு ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நூற்றுக்கணக்கான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, மக்கள் அவதிக்குள்ளாகினர்.

இதற்கிடையே, தெற்கு பகுதியில் மழை தொடரும் என்று தைவான் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், சீனாவின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்ததால், சாலைகள் சேதமடைந்ததாகவும், வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் அப்புறப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*17* வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் *Sitender* தங்கப்பதக்கம் வென்றார்.

கிரீஸின் ஏதென்ஸில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் *60* கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா *6* ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

லண்டனில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 35 ரன் மட்டுமே தேவைப்பட்ட நிலையில், இந்திய பந்துவீச்சாளர்கள் முகமது சிராஜ் மற்றும் பிரசீத் கிருஷ்ணா-வும் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

*Harry Brook 111* ரன்னுக்கும், *Joe Root 105* ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் முகமது சிராஜ் அபாரமாக பந்து வீசி *5* விக்கெட்டுகளையும், *Prasidh Krishna* நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா *2* ஆட்டங்களில் வெற்றிபெற்றன. ஒரு போட்டி டிரா ஆனது

---------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் *Bhawna Sharma, Yatri Patel* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், *22* வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் *48* கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் *Bhawana Sharma* - வியட்நாமின் *Ngoc Linh Chi Ngo*-வை வென்றார்.

மகளிர் *57* கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் *Yatri Patel* – இலங்கையின் கீர்த்தனா உதயகுமாரை வென்றார்.

--------------

பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manush Shah – Diya Chitale* இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

--------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு ஹாக்கிப்போட்டிகளில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்த அணியில் *24* பேர் இடம்பெற்றுள்ளனர்.

முதலாவது போட்டி பெர்தில் வரும் *15*-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

***<<<<<<END>>>>>>>***